செய்தி வெளியீடு எண்.141 நாள் 08.03.2017

**திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கெட்னமல்லி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் 78 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

~~~~~~

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கெட்னமல்லி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.03.2017) 78 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் பல்வேறு துறைகளின் சார்பாக அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. இதில் சுகாதார துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், கல்வித்துறை, மகளிர் மேம்பாட்டுத் திட்டம், கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, செய்தி மக்கள் தொடர்பு துறை, கூட்டுறவுதுறை ஆகிய துறைகளின் சார்பாக அரங்குகளில் சிறு கண்காட்சி அமைக்கப்பட்டு அந்தந்த் துறை சார்பாக அரசு வழங்கும் நலத்திட்டங்கள் குறித்து அரசுத் துறை அலுவலர்கள் பொதுமக்களுக்கு விளக்கம் அளித்தார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் கூறுகையில், “திருவள்ளூர் மாவட்டத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அடித்தட்டு மக்களுக்கும் அதிக சேவை வழங்கும் அம்மா திட்டம் நடத்தப்பட்டு மனுக்களை பெற்று உரிய தீர்வுகள் வழங்கப்படுகிறது. மக்களின் குறைகளை பூர்த்தி செய்ய அரசே மக்களை தேடி அவர்களது கிராம ஊராட்சியில் மனுக்களை பெற்று அதற்கு தகுந்த அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இதுபோன்ற மக்கள் தொடர்பு திட்ட முகாம் மூலம் அரசின் நலத்திட்டங்கள் மக்களுக்கு நேரடியாக கொண்டுசெல்லப்படுகிறது. மக்கள் அனைத்து அரசு நலத்திட்டங்களை பற்றியும் அவற்றை எவ்வாறு பெற வேண்டும் என்பதை பற்றியும் இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். இந்திய அளவில் தமிழ்நாடு மாநிலம் கல்வி மற்றும் சுகாதாரத்தில் முதலிடத்தில் இருந்தது. கல்விதுறையில் மாணவர்களுக்கு 14 வகையான உபகரணங்கள் வழங்கப்பட்டுவருகிறது. மாணவர்களுக்கு புத்தகம், பை, சீருடை, காலணிகள் முதல் மிதிவண்டி, மடிக்கணினி வரை அனைத்தும் அரசு விலையில்லாமல் வழங்கி மாணவர்கள் கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தி வருகிறது. இதனை அனைத்து பெற்றோரும் தெரிந்து கொண்டு தங்கள் குழந்தைகளை பள்ளிகளுக்கு இடைநிற்றல் இல்லாமல் அனுப்பி வைக்க வேண்டும். பெற்றோர்கள் அனைவரும் தங்கள் பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் குறிப்பிடதக்கவை திருமணத்திற்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டங்களாகும்.

காலநிலை மாறுபாடு காரணமாக பல்வேறு தொற்றுநோய் மற்றும் காய்ச்சல் ஆகியவை ஏற்படும். சுகாதாரத் துறை மூலமாக பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டும் குறிப்பாக, இருளர் மக்கள் அதிகமுள்ள பகுதிகளில் காய்ச்சல் குறித்த அறிகுறிகள் கண்டறியப்பட்டு வருகிறது. மக்கள் அனைவரும் அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றை நாடி நோய்த் தொற்றுகளுக்கு மருந்துகள் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், பொதுமக்கள் அனைவரும் சுகாதாரமாக இருக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன்பாக கைகளை கழுவி உணவு அருந்த வேண்டும். கைகழுவுவது தொடர்பான விழிப்புணர்வு பள்ளி மாணவ, மாணவிகளிடம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் அனைவரும் டெங்கு, பன்றிக்காய்ச்சல் போன்ற நோய்த் தொற்றுக்களில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும். மழைக்காலங்களில் பொதுமக்கள் தங்கள் வீடுகளைச் சுற்றியுள்ள குப்பைகளை சேர்ப்பதை தவிர்க்க வேண்டும். அவ்வாறு இருக்கும் குப்பைகளையும் அகற்றி கொசு புழுக்கள் உருவாவதை தவிர்க்க வேண்டும். காய்ச்சல் ஏற்படும் பட்சத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளை நாடி சென்று மருத்துவரின் ஆலோசனையின்படி மருந்துகளை சாப்பிட வேண்டும். போலி மருத்துவர்களை அணுகுவதை தவிர்க்க வேண்டும்.

மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் பிப்ரவரி 6 முதல் 28 வரை 9 மாதம் முதல் 15 வயது உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இந்த தடுப்பூசி மூலம் தட்டமை மற்றும் மணல்வாரி அம்மை நோய்கள் ஆகியவை தடுக்கப்படும். மாவட்டத்தில் 5,60,704 குழந்தைகளுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டு 4,40,000 குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசியினால் குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு 30 வகையான நோய்கள் முற்றிலுமாக தவிர்க்கப்படும். எனவே பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடவேண்டும்” என்று கூறினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் இருந்து 50-க்கும் மேற்பட்ட மனுக்களை நேரில் பெற்றுக் கொண்டு, அதற்கு உரிய தீர்வுகளை விரைந்து வழங்குமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார். முன்னதாக சுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை, சமூக நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய அரசுத்துறையின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து துறை உயர் அலுவலர்கள் திட்ட விளக்க உரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி.வேணுகோபால், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.விஜயகுமார், பொன்னேரி சார் ஆட்சியர் திரு.வி.பி.தண்டபாணி,இ.ஆ.ப., கும்மிப்பூண்டி வட்டாட்சியர் திரு.ஸ்ரீதரன், தனி வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர்கள், பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~~